**பாணந்துறை பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஏப்ரல் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாணந்துறை பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | உள்ளூராட்சி நிறுவனங்களின் கணக்கு வைக்கும் நடைமுறையின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் கூட்டுத்தொகைக்கு மூலதன ஈடுபடுத்துதலுக்கான வருமான பங்களிப்பினதும் மூலதன உதவின் மூலமான பங்களிப்பு கணக்கினதும் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டிய போதிலும் அந்த கணக்குகளுக்கிடையே ரூபா 678,765 வேறுபாடு காணப்பட்டது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 120,316 தொகையான மீண்டெழும் செலவினம் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | | |
| (iii) | மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 1,009,678 தொகையான பிடியாணைக் கட்டணம் செலவினக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு ஆதன வரிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் செலவினம் ரூபா 1,009,678 தொகை அதிகரித்தும் நிலுவை ஆதன வரிக் கணக்கின் மீதி ரூபா 1,009,678 தொகை குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (iv) | 2017 ஆம் ஆண்டின் போது 2018 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 1,670,654 தொகையாக முற்பணமாக கிடைத்த ஆதன வரி தொகை மீளாய்வாண்டின் போது முற்பணமாக கிடைத்த வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தும் அந்த மீதி நிலுவை ஆதன வரிக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (v) | மீளாய்வாண்டில் ஆதன வரிக்காக வழங்கப்பட்ட ரூபா 826,271 தொகையான கொடுக்கப்பட்ட கழிவு, செலவினக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிலுவை ஆதன வரிக் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (vi) | பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தில் ஏனைய வருமானம் மற்றும் பொதுத் தேவை நிகழ்ச்சித் திட்டத்தில் வாடகைப் பணம் முறையே ரூபா 10,791,838 தொகை மற்றும் ரூபா 2,236,050 தொகை அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (vii) | 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.1 (எ) சரி செய்யும் போது ரூபா 52,838 மீதியான பற்றாக்குறை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | மிகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிலையான வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் எந்தவொரு வரவு பதிவுகளும் இன்றி மேற்கூறப்பட்ட மீதி பற்றாக்குறை மிகைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (viii) | மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சித் திணைக்களத்திலிருந்து கடன் அடிப்படையில் வழிங்கப்பட்ட ரூபா 11,934,000 பெறுமதியான கம்பெக்டர் வாகனத்திற்காக ஆண்டின் முத்திரை வருமானமாக அறவிடப்பட்ட ரூபா 620,000 தொகை மூலதனமாக்கப்படவில்லை. மேலும் கட்பெக்டர் வாகனத்தின் பெறுமதி பயன்பாட்டு சேவைகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டு மாகாண சபை கடன் கணக்கில் செலவு வைக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (ix) | 2017 ஆம் ஆண்டின் போது மாகாண சபை கடன் அடிப்படையின் கீழ் வழங்கப்பட்ட டெக்டர் மற்றும் 02 டேலர்கள் 2018 திசெம்பர் 31 வரை முத்திரைக் கட்டணங்களில் அறவிடப்பட்ட தொகையை இனங்கண்டு கணக்கீடு செய்யப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | முத்திரைக் கட்டண வருமானத்தில் கடன் தவணை அறவிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. |
| (x) | மீளாய்வாண்டின் போது விநியோகிக்கப்பட்ட ரூப 6,447,284 தொகையான மின் உபகரணங்கள் மின்சார களஞ்சியக் கணக்கில் ரூபா 647,289 ஆக பதியப்பட்மையின் காரணமாக மின்சாரக் களஞ்சியக் கணக்கின் மீதி ரூபா 5,799,995 தொகை அதிகரித்தும் ஆண்டின் செலவினம் அப்பெறுமதியால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (xi) | மீளாய்வாண்டின் இறுதியில் ஓய்வூதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 3,170,608 தொகைக்காக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன் கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | | |
| (xii) | பொது நிர்வாக நிகழ்ச்சித் திட்டத்தின் போக்குவரத்து மற்றும் தேவை சேவைகளுக்கான செலவினம் ரூபா 498,135 தொகை அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (xiii) | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 200,000 தொகை மீண்டெழும் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் மூலதனச் செலவினத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (xiv) | மீளாய்வாண்டின் மூலதன நிதியுதவி ரூபா 81,110 தொகை அதிகரித்து காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (xv) | மீளாய்வாண்டின் போது செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட சபை வேலைகளுக்காக ரூபா 70,768 தொகையான கடன்கொடுத்தோர் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (xvi) | முத்திரைக் கட்டணக் கணக்கின் மீதி ரூபா 1,167,500 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ரூபா 294,787,470 தொகையான 10 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்கும் அவற்றிக்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்குமிடையே ரூபா 85,725,192 வேறுபாடு காணப்பட்டிருந்தது. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்குகளை மீண்டும் பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்குகள் மீளாய்வாண்டின் செயற்றிட்டத்திற்காக கிடைத்த ரூபா 1,516,322 தொகையான பெறுமதி சேர் வரியையும் உள்ளடக்கி (VAT) ஆண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரிக் கணக்கின் மீதி ரூபா 4,006,287 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதி கால ரீதியில் தீர்த்து வைக்கப்பட வேண்டும். | செயற்றிட்டத்திற்காக கிடைத்த பெறுமதி சேர் வரி யாருக்கு செலுத்த வேண்டும் என ஆராய்ந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கடன்கொடுத்தோர் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலை காணப்படாமையினால் ரூபா 42,806,299 தெகையான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | 147 மற்றும் 149 ஆம் பிரிவுகள் | | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா சபை அபிவிருத்தி சட்டத்தில் சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஆண்டின் பெறுவனவுகளில் ஒரு சதவீத கட்டணம் அறவிட வேண்டிய போதிலும் 10 ஹோட்டல்கள் வியாபார அனுமதிப் பத்திரம் பெறாதிருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளை நடாத்திச் சென்றமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த பெறுவனவுகளில் 01 சதவீதம் அறவிட்ட வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | 08 ஹோட்டல்களுக்கு வியாபார அனுமதிப் பத்திரம் பெறுமாறு அறிவிக்கப்பட்டதுடன் அதில் ஒரு ஹோட்டல் பணம் செலுத்தியிருந்ததுடன் இன்னுமொரு ஹோட்டலில் இருந்து சுற்றுலா வரி அறவிட முடியாதுள்ளது. |
| (ii) | 154(1) ஆம் பிரிவு | 1,336,505 | காணி கூறிடப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 03 காணிகளில் இருந்து ஒரு சதவீத வரி வருமானப் பரிசோதகரின் மதிப்பீட்டுப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்பட்டிருந்தது. | ஏலத்தில் காணிகள் விற்பனை செய்யும் போது கிடைத்த தொகையில் 01 சதவீதம் வரியாக அறவிடப்பட வேண்டும். | 01 சதவீத வரி செலுத்துமாறு அறிவிக்கப்பட்ட போதும் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு வருமானப் பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டது. |
| (iii) | 160 ஆம் பிரிவு | | நிலுவை ஆதன வரி அறவிடும் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதன வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை ஆதன வரியை அறவிடுமாறும் இல்லையாயின் ஆதனங்களை தடைசெய்வதற்கும் வருமானப் பரிசோதகருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | 126,193,162 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிப்பிற்கு | வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | சபைக்குச் சொந்தமதான காணிகள் தொடர்பாக பதிவேடு ஒன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உட்படுத்தப்படவில்லை . | | எடுக்கப்பட்டதுடன் காணி அளவை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(இ) | 1,675,050 | செலுத்தப்பட்ட முற்பணம் உரிய பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | முற்பணம் குறித்த பிரகாரம் தீர்க்கப்பட வேண்டும். | பத்து வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டுவரப்படுகின்ற நிலுவைகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | 9,356,509 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதி 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் 3.1 ஆம் பிரிவு | - | 31 வாகனங்களுக்காக எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்பட வேண்டும். | 06 வாகனங்களுக்கு எரிபொருள் பரீட்சிக்கப்பட்டதுடன் மிகுதி வாகனங்களுக்கு எரிபொருள் எரிவை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2017 திசெம்பர் 08 ஆம் திகதி 2049 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி | - | மீளாய்வாண்டிற்காக முச்சக்கர வண்டி தரித்து வைத்தல் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 750 அறவிட வேண்டி தீர்மானிக்கப்பட்ட போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முச்சக்கர வண்டி நிறுத்திவைத்தல் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | முச்சகர வண்டி நிறுத்திவைக்கும் இடங்களை இனங்கண்டு அதன் பின்னர் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 58,834,435 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 65,254,035 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 25,631,310 | 31,760,665 | 18,422,124 | 26,544,049 | 2,232,500 | 29,178,683 | 18,107,118 | 21,961,625 |
| (ii) | வாடகை | 2,151,108 | 7,045,713 | 6,716,140 | 3,645,828 | 10,135,500 | 3,069,708 | 2,750,493 | 3,672,980 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 350,000 | 625,200 | 573,700 | 51,500 | 475,500 | 5,304,320 | 5,304,320 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 70,425,500 | 63,500,000 | 79,174,655 | 60,468,348 | 67,461,500 | 61,000,000 | 65,205,657 | 70,379,045 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டிற்குரிய ஆதன வரி சிட்டையிடல் ரூபா 29,359,735 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 13,210,735 தொகை அதாவது 45 சதவீதம் அறவிடப்படவில்லை. | நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | 2019 யூலை 10 வரையிலும் நிலுவை ஆதன வரி மீதியில் ரூபா 4,967,988 அறவிடப்பட்டதுடன் நிலுவை ஆதனவரி அறவிடுவதற்காக நடமாடும் வேை நடாத்தப்படும். |

### 2.2.3 வியாபார நிலைய வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார நிலைய வாடகை 2018 சனவரி 01 இல உள்ளவாறு நிலுவை வியாபார நிலைய வாடகை மீதி ரூபா 3,772,005 ஆக இருந்ததுடன் அந்த மீதியில் ரூபா 3,316,255 தொகை அதாவது 88 வதவீதம் ஆண்டின் இறுதிவரை அறவிடப்படவில்லை. இந்த நிலுவைக் கடை வாடகை மீதியில் கொசல்வத்தை பொலிஸிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,434,613 தொகையான மீதி மற்றும் 13 கடைகளுக்குரிய ரூபா 912,900 தொகையான கடை வாடகை மீதி என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகை அறவிடுவதற்காக வழக்கு தொடரப்பட்ட போதும் விடயங்கள் இல்லாமையின் காரணமாக வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதுடன் அறவிட முடியாத வாடகையை புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) நீதிமன்றத் தண்டப்பணம் | | |
| ரூபா 5,716,191 தொகை அறவிடவேண்டியதாக இருந்தும் ஆண்டின் போது நீதிமன்ற தண்டப்பண வருமானமாக எந்தவொரு தொகையும் கிடைத்திருக்கவில்லை. | நீதிமன்ற தண்டப்பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2015 ஆம் ஆண்டு முதல் நீதிமன்ற தண்டப்பணத்திற்காக பட்டோலை தயாரிக்கப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) முத்திரைக் கட்டணம் | | |
| 2018 ஆம் ஆண்டிற்கான முத்திரைக் கட்டணமாக ரூபா 128,151,305 தொகை கிடைக்க வேண்டியிருந்த போதிலும் ஆண்டின் போது முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 59,566,648 தொகையும் ரூபா 15,000,000 தொகையான முற்பணமும் மாத்திரம் கிடைத்திருந்தது. | முத்திரை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு காணிப் பதிவாளர் அலுவலகத்தில் இருந்தும் முத்திரைக் கட்டணம் பெறப்பட்ட முறை காட்டப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **உப விதிகள்** | | |
| | பிரதேச சபைகள் அதிகார சட்டத்ததின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் 06 பிரதான பணிகளுக்காக மாத்திரமே உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | உப விதிகள் தொடர்பாக சபைக்கு முன்மொழிவுகளைச் செய்து எதிர்காலத்தில் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | **செயல் நடவடிக்கைத் திட்டம்** | | |
| (i) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதியில் 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பாதீட்டில் காணப்படாத ரூபா 152.2 மில்லயன் தொகையான நிதி ஏற்பாடு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | பாதீட்டிற்கு இணங்கும் வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | பாதீட்டையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தையும் ஒப்பீடு செய்து காணப்படும் குறைபாடுகளை சரி செய்து எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டின செயல் நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் இனங்காணப்பட்ட 07 பிரவுகளில் 124 பணிகளை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் வீதி நிர்மாணங்கள் தவிர ஏனைய செயற்பாடுகளுக்காக கட்டுநிதித் திட்டம் அல்லது அமுல்படுத்தும் கால அட்டவனை சரியாக இனங்காணப்படவில்லை. | செயற்திட்டங்களுக்காக கட்டுநிதித் திட்டம் மற்றும் கால அட்டவணை தீர்மானிக்கப்பட வேண்டும். | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்குரிய நிதி ஏற்பாட்டில் காண்பிக்கப்பட்ட சுற்றறிக்கையில் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்கப்படும். |
| (iii) | 2018 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 95.50 மில்லியன் கிரயமான 41 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படவில்லை. மேலும் கொசல்வத்தை உப அலுவலக அதிகாரப் பிதேசத்தில் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்டங்கள் இனங்காணப்படாதிருந்ததுடன் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 80 மில்லியன் தொகையில் ரூபா 4.8 மில்லியன் தொகைக்குரிய செயற்திட்டம் மாத்திரம் 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டங்கள் தெளிவாக இனங்காணப்பட்டு அந்த செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் புதிய சபையுடன் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு புரம்பான செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படும். |
| (iv) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து செயல் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டங்களை நிறைவேற்றும் செயல் முன்னேற்றத்தை அளவிடும் திட்டமொன்று சபையில் காணப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்றம் எழுத்து மூலம் அறிக்கையிடப்பட வேண்டும். | செலவினங்கள் வெவ்வேறாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு மேற்பார்க்கான திட்டமொன்று எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். |
| (v) | 2018 ஆம் ஆண்டில் சபை நிதியத்திலிருந்து அமுல்படுத்தப்பட்ட ரூபா 33.51 மில்லியன் தொகையான மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தில் 47 செயற்திட்டங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புரம்பாக அமுல்படுத்தப்பட்டதுடன் வருடாந்த பாதீட்டில் அதற்கான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | பாதீட்டு நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். | புதிய சபையொன்று நியமிக்கப்பட்டதன் பின்னர் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் உறுப்பினர் பிரேரனையின் பிரகாரம் செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| சபையினால் 2018 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டை தயாரிக்கும் போது 2017 யூலை 31 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கை BD/CBP/4/1/2-2018 ஆம் இலக்கத்தின் பிரகாரம் புதிய கொள்கை ரீதியான மூன்று உபாய வழிகள் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல் தொடர்பான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் இனங்காணப்பட்ட குறிகாட்டிகளுக்காக சகல தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தரவுகளைச் சேகரிக்கும் முறையும் பின்பற்றப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை இனங்கண்டு அவற்றை பாதீட்டில் உள்ளடக்கி நிறைவேற்றுதல் மற்றும் குறிகாட்டிகளை இனங்கண்டு அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி அமைச்சின் அறிவுறுத்தலின் பிரகாரம் 2019 முதல் 2023 வரை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது. |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 பதவிகளில் 36 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 24 நாற்கூலி அடிப்படையிலும் 02 ஒப்பந்த அடிப்படையிலும் சேர்க்கப்பட்டிருந்தன. | வெற்றிடமான பதவிகள் நிரப்ப வேண்டியிருந்ததுடன் நாற்கூலி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ள முடியாது. | 21 ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மரணமடைந்த இடமாற்றலாகிச் சென்ற 20 உத்தியோகத்திர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் அறவிட வேண்டிய ரூபா 1,031,938 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | |

| | | |
|---|---|---|
| (இ) 2015 ஆம் ஆண்டின் போது கொழும்பு மாநக சபையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த சாரதியொருவர் சபையில் சேவையாற்றாத போதிலும் அந்த ஊழியருக்காக 2018 மே வரை சம்பளம் செலுத்துவதற்காக ரூபா 1,220,585 மேலதிக செலவினம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | சபையில் கடமைகளை நிறைவேற்றாமையால் சபையினால் செலுத்தப்பட்ட சம்பளத்தை மீளளப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு இடம் மாற்றம் பெற்று வந்த சாரதிக்காக சம்பளம் செலுத்தும் அடிப்படையில் பிரதம அமைச்சர் அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது சபையில் சேவையாற்றாதிருந்தது டன் மொரட்டுவை மாநகர சபைக்கு விடுவிக்கப்பட்டிருந்தார். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கொசல்வத்தை உப அலுவலகத்திற்குரிய பிரதேசங்களின் வீதி விளக்குகளுக்காக சேவை வழங்குதல் மற்றும் பழுதுபார்த்தல் நடவடிக்கைள் சபையினால் மேற்கொள்ளப்படும் போது வீதி விளக்குகள் ஒளிர்வதற்காக 2017 சனவரி முதல் ஒக்டோபர் வரை உடன்படிக்கை இன்றி இலங்கை மின்சார தனியார் கம்பனிக்கு ரூபா 766,722 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பராமரிப்பு நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்படுவதால் கொடுப்பனவு செய்யமுடியாது. | பழுது பார்த்தல் பராமரிப்பு நடவடிக்கைள் இடம் பெற்ற போதிலும் மின்சாரத்திற்குரிய கொடுப்பனவுகள் மாத்திரம் மேற்கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான காணி கட்டிடங்கள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு சரியாக இனங்கண்டு பதிவேடுகளுக்கு கொண்டுவரப்படவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை மெய்மையாய்வு செய்து நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்க வேண்டும். | சபைக்குச் சொந்தமதான காணி தொடர்பாக உப அலுவலக மட்டத்தில் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றது. |

## 3.5 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கெங்கிரீட் மற்றும் தார் இட்டு அபிவிருத்தி செய்யும் 04 வீதிகளுக்காக நிர்மான வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ரூபா 3,433,875 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | நிர்மாண மதிப்பீட்டை தயாரிப்பதற்கு முன் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். | நிர்மாணிக்கப்பட வேண்டிய இடங்கள் தொடர்பாக மொத்த மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றது. யுடீஊ நிரப்ப வேண்டிய இடங்கள் இனங்காணப்படாதிருந்த துடன் அதில் எதிர்காலத்தில் அந்த இடங்களைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தயாரிக்கப்பட்ட வடிவமைப்புக்கள் தவறினால் கையொப்பமிடப்படாதிம ருந்ததுடன் அவைகள் எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |
| (ஆ) | 2018 யூன் 30 ஆம் திகதிய LGD/03/2018 ஆம் இலக்க உள்ளுராட்சித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் கெங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட 05 வீதிகளின் தடிப்பு மற்றும் கொள்ளளவு சக்தி பரீட்சிக்கப்படாமல் ரூபா 3,745,795 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டிருந் த போதிலும் அறிவித்தல் தாமதமாக இருந்தது. இந்த வீதிகள் சுற்றறிக்கைக்கு முன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டவைகளா கும். |
| (இ) | ஆரம்ப மதிப்பீட்டு அளவிடை அறிக்கைகளில் வேலை விடயங்களுக்கு முரணாக இறுதி கொடுப்பனவு அறிக்கையில் அதிக விலை வீதம் பயன்படுத்தப்பட்டு 06 செயற்திட்டங்களுக்காக யுடீஊ கொள்வனவு செய்வதற்காக ரூபா 243,933 தொகை ஒப்பந்தகார சங்கத்திற்கு | மதிப்பீடு செய்யப்பட்ட வேலை விடயங்களின் பிரகாரம் ABC இற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது டன் மேலதிகமாக | ரூபா 2,163 விலை வீதத்தில் ABC வழங்குதல் முடியாதிருந்தமையினா ல் தொழில்நுட்ப உத்தியோகத்தருடன் கலந்துரையாடி ரூபா 3,194 விலை வீதம் பயன்படுத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டிருந்த பணம் அறவிடப்பட வேண்டும். | |
| (ஈ) | இரண்டு செயற்திட்ட வீதிகளுக்கு கெங்கிரீட் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ஒப்பந்தகார சங்கத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட கெங்கிரீட் கனமீட்டர் அளவை விஞ்சி 6.05 கனமீற்றருக்காக ரூபா 95,763 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டை விஞ்சி அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்ட தொகை அறவிடப்பட வேண்டும். | சபை உறுப்பினரின் கோரிக்கையின் அடிப்படையில் வீதியின் அகலம் அதிகரிக்கப்பட்டமையால் இவ்வாறு செலுத்தப்பட்டிருந்ததுடன் அங்கீகாரம் பெறப்படவில்லை. எதிர்கால்த்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 03 வீதிகளுக்கு கெங்கிரீட் இடுவதற்காக ரூபா 2,298,689 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் வீதியின் மேற்பகுதியில் கற்கள் வெளிப்பட்டு குறைந்த தரத்துடன் காணப்பட்டது. | ஒப்பந்தகார சங்கத்தினால் வீதிகள் சரியாக அமைக்கப்படும் வரை நிறுத்திவைக்கப்பட்டுள்ள பணம் விடுவிக்க முடியாது. | நிர்மாணிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் மழைக்கு உட்பட்டமையினால் வீதிகளின் தரம் குறைவடைந்திருந்ததுடன் ஒப்பந்தகாரரை அழைத்து மீண்டும் தயாரிக்குமாறு அறிவிக்கப்படும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் 2.2.1 (உ),(ஊ) மற்றும் (எ) இல் காண்பிக்கப்பட்டுள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். |